# மனிதாபிமானப் பிரச்சினையின் முடிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடற்றவர்களுக்குப் பிரஜாவுரிமை வழங்குவதற்கான சட்டமூலம் தொடர்பாக கௌரவ பிரதமர் திரு. ஆர். பிரேமதாச அவர்கள் ஆற்றிய பேருரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கௌரவ சபாநாயகர் அவர்களே !

சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தை அமுல்நடத்தும்பொழுது தோன்றிய பார தூரமான முரண்பாட்டை அகற்றுவதற்காக இந்தச் சட்டமூலத்தை உங்கள் முன் சமர்ப்பிக்கக் கிடைத்தமை குறித்து மகிழ்ச்சியடைகின்றேன். உயர்நீதி மன்றத்தின் தீர்ப்புக்கிணங்க இச்சட்டமூலத்தை மூன்றில் இரண்டு பெரும் பான்மை வாக்குகளால் நிறைவேற்றிவைக்குமாறு இக்கௌரவ சபையைக் கேட்டுகொள்ளுகின்றேன்.

கௌரவ சபாநாயகர் அவர்களே, இந்தச் சட்டமூலத்தை நிறைவேற்றி வைப்பதன்மூலம் எமது மக்களுக்கு வேதனை அளித்துவந்த பெரிய புண் ணொன்று குணமடையும் என்பதை நீங்களும் ஏற்றுக்கொள்வீர்கள். அந்தப் புண்ணைச் சுகப்படுத்த நாமெல்லோரும் உதவ வேண்டும். அந்தப் புண் சீழ் பிடித்து புரையோட நாம் இடமளிக்கமுடியாது. புண்ணில் மொய்ப்பது ஈக்கள். புண் சுகமடைய அவை இடமளிப்பதில்லை. அந்த ஈக்களைப்போன்ற மனிதர் களும் இருக்கிறார்கள். அவர்கள் அரசியல் புண் சுகமடைய இடமளிக்கமாட்டார் கள். அதனால் அவர்கள் அரசியல் இலாபம் பெற முடியுமென்பதால் அதைக் குணமடைய விடமாட்டார்கள்.

கௌரவ சபாநாயகர் அவர்களே, தேசாபிமானம் 'ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்கு மாத்திரமுள்ள ஏகபோகவுரிமையெனக் காட்ட பலவீனமான முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. அது குறித்து நான் கவலைப்படுகின்றேன். இயற்கை யாகவே பலவீனமுள்ள அதிகார ஆசையினால் உந்தப்பட்ட இவர்கள் நீரில் மூழ்கப்போகும் மனிதன் வைக்கோலைப் பற்றுக்கோலாக பிடித்துக்கொள்ள முயலுவதைப்போன்றதொன்றைச் செய்யத் துடிக்கிறார்கள். நீந்தத் தெரிந்த வன் நீர்ச் சுழியிலிருந்து தப்பி நீந்தி அக்கரையை அடைய முயலுவதற்குப் பதிலாக, நீந்த முடியாதவன் அரசியல் சுழல் காற்றுக்கெதிராக நீந்திச் செல்ல முயல்வது ஆபத்தான காரியமாகும். முடியாததைச் செய்யப்போகிற அந்த மனிதன் அப்பாவிப் பொதுமக்களையே பலியிட நேரிடும். இது இந்நாட்டு அரசியலின் துரதிர்ஷ்டவசமான இலட்சணமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கௌரவ சபாநாயகர் அவர்களே !

இந்த 94,000 பேரும், அவர்களின் இயற்கைப் பெருக்கமும் இந்திய வம்சாவளியினர் என்பது உண்மையே. எனினும், இந்த நாட்டை விட்டு ஏதேனும் காரணத்தைக் கொண்டோ, வாழ்க்கைத் தரம், அல்லது தொழில் அல்லது அதிக சம்பளம், இலங்கையின் நல்ல சுவாத்தியம் என்பன காரணமாகவோ இந்தியாவுக்குத் திரும்ப அவர்கள் விரும்பவில்லையென்றால் நாம் செய்யக்கூடியதென்ன ? சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தம் தயாரிக்கப்பட்டபொழுது, திருமதி பண்டாரநாயக்கா "நாம் அவர்களை என்ன செய்யலாம் ? அவர்களை கடலில் தள்ளி விடவேண்டும் என்று சொல்லுகிறீர்கள் ?" என்று கேட்டார். அப்பொழுது, அதாவது 1964 சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் மூன்று லட்சம் பேருக்கு பிரஜாவுரிமை வழங்க ஒத்துக்கொண்டவேளையில், அவரைச் சிலர் கண்டித்தார்கள். திருமதி பண்டாரநாயக்கா அதனை இவ்வளவு விரைவில் மறந்து விட்டது குறித்து நான் கவலைப்படுகின்றேன். ஐக்கிய தேசியக் கட்சி, சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தை எதிர்க்கவில்லையென்பதை உங்களுக்கு ஞாபகமூட்ட விரும்புகிறேன். நாம் அதனை காத்திரமான மனிதப் பிரச்சினையாகவே கருதினோம். ஆம் தேசிய பிரச்சினையாக மனதிற் கொண்டோம். இன்னுமொரு விடயத்தை நீங்கள் ஞாபகத்திற்கொள்ளவேண்டும். இந்திய வம்சாவழி மக்களின் பிரச்சினை தீர்க்கப் படாதிருக்கும்வரை, அதனை இந்தியப் பிரச்சினையாகவே இந்தியா கருதமுடியும்.

எம் நாட்டின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிட அதனையே ஒரு சாட்டாகக் கொள்ளவும் இடமுண்டு. இந்த மக்கள் சந்ததி, சந்ததியாக இந்நாட்டிலே வாழ்ந்தவர்களாவர், அவர்கள் வேறெந்த நாட்டுக்கும் சொந்தமானவர்கள் அல்ல. அவர்கள் போவதற்கு வேறெந்த நாடும் இல்லை. அவர்களின் உற்றார் உறவினர்கள் யாரென்பதையும் இப்பொழுது அவர்கள் அறியமாட்டார்கள். அவர்களின் பாட்டன், பூட்டன்மார் இந்தியாவின் எந்தப் பிரதேசத்திலிருந்து வந்தார்கள் என்பது கூட அவர்களுக்குத் தெரியாது. இவற்றை யெல்லாம்விட அவர்களை எமது பிரஜைகளாக்குவதற்கு பிரதான காரணம் அவர்கள் இந்நாட்டின் ஐக்கியத்தையும் ஒருமைப்பாட்டினையும் ஆதரிப்பவர்கள். இறைமையை ஏற்றுக்கொள்ளுபவர்கள் என்பதாகும். சிங்கள மக்கள் பெரும்பான்மையாக வாழும் பிரதேசங்களிலே அவர்கள் சிங்கள மக்களுடன் ஒற்றுமையாக வாழுகின்றார்கள்.

எனவே, கௌரவ சபாநாயகர் அவர்களே, நான் ஏற்கனவே குறிப்பிட்ட புண் ஏற்பட உண்மையான காரணம் என்ன என்பதை நாம் சரியாக விளங்கிக் கொள்ளவேண்டும். சர்வகட்சி மகாநாட்டின் மூலமாக மக்களின் கருத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரைத்துப் பார்த்தோம். நாடற்றவர்கள் சம்பந்தமான பிரச்சினை குறித்து மேதகு ஜனாதிபதி அவர்கள் சர்வகட்சி மகாநாட்டில் சமுகமளித்திருந்த தலைவர்களின் குழுத் தலைவர் என்ற முறையிலே இவ்விதம் குறிப்பிட்டார் :—

"(3) நாடற்றவர்கள்.— நாடற்றவர்கள் பிரச்சினைக்குத் தீர்வு காணுவது குறித்து மகாதேரர்கள் இவ்விதம் உரைத்தார்கள் :—

"இந்தியர்கள் என்று கூறிக்கொள்ளும் கூட்டத்தினர் எம்மிடையில் இருக்கக்கூடாது. சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இந்தியாவுக்கு அனுப்பப்பட வேண்டியவர்களை இந்தியாவுக்கு அனுப்புவதன் மூலமும் எஞ்சியவர்களுக்கு பிரஜாவுரிமை வழங்குவதன் மூலமும் இப்பிரச் சினையை இலகுவாகத் தீர்த்துக் கொள்ளலாம். அந்த எஞ்சிய மக்களின் எண்ணிக்கை சிறிது அதிகரித்தாலும் இப்பிரச்சினைக்குத் தீர்வுகாணுமுகமாக அவர்களுக்கு பிரஜாவுரிமை வழங்கப்படுவதை உயரிய சங்க சபை எதிர்க்காது என்பதைப் பிரகடனப்படுத்துகிறது."

"மகாதேரர் அவர்கள் வெளியிட்ட இந்தக் கொள்கைக்கு கிறிஸ்தவ சபைகளினதும், இந்து (விஷ்வ ஹிந்து பரிசத்) மன்றத்தினதும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸினதும், ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸினதும், லங்கா சமசமாஜக் கட்சியினதும் ஆதரவு கிடைத்தது. இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி இந்திய வம்சாவழியினரில் பிரஜாவுரிமை இல்லாத அனைவருக்கும் இந்தியாவுக்குப் போக விரும்பினால் அவ்விதம் செல்ல சகல வசதிகளையும் அளிக்கவேண்டுமெனவும், எஞ்சியோருக்கு இலங்கைப் பிரஜாவுரிமை ஏனைய பிரஜைகளுக்குச் சமமாக பெற்றுக் கொடுக்க வேண்டுமெனவும் தெரிவித்தது. இதற்கு எதிரான கருத்து எதுவும் அங்கு தெரிவிக்கப்படவில்லை."

கௌரவ சபாநாயகர் அவர்களே ! மூன்று நிகாயங்களின் சார்பாக 1984 பெப்ருவரி 22 ஆந் திகதி, மீஉயர் மகாசங்க சபை சர்வகட்சி மகாநாட்டுக்கு விடுத்த பிரகடனத்தின் பிரதியொன்று என்னிடமுண்டு. அந்தப் பிரகடனத்தில் இது தொடர்பான பிரிவுகளை இப்பொழுது வாசிக்கின்றேன் :

இந்தியத் தமிழர் பிரச்சினை — இந்தியத் தமிழர் யாவர் ?

நாடற்றவர்கள் என்ற பிரிவிலடங்கும் எண்ணிக்கை 1964 இன் ஆரம்ப எண்ணிக்கையான 1,71,389 க்கு மேல் இப்பொழுது அதிகரித்துள்ள தென்பதிற் சந்தேகமில்லை. இலங்கையில் பிறந்த அவர்களை இந்தியா ஏற்றுக்கொள்ளத் தயாரில்லையென்பது தெரியவருகின்றது. நாம் என்ன செய்வோம் ? இப்பிரச்சினை, காலதாமதமின்றித் தீர்க்கப்படவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏதேனும் ஒரு நாடு இன்னொரு நாட்டின் உள்விவகாரங்களில் தலையிடுவது சாதாரணமாக நடப்பதில்லை. இந்நாட்டில் இந்தியர்கள் இருப்பதனால் இந்தியா இலங்கை விவகாரங்களில் தலையிடுகிறது. அண்மைக் காலத்தில் எமது விவகாரங்களில் இந்தியாவின் தலையீடு அதிகரித்துள்ளது. இலங்கைப் பிரஜாவுரிமை பெருத இந்தியர்கள் எனப்படுவோர் இங்கிருப்பதனாலேயே இந்நிலை ஏற்பட்டுள்ளது. இது தேவையற்ற பிரச்சினையாகும். இந்தச் சிக்கல் தீர்க்கப்பட வேண்டுமெனில் இந்தியர்கள் எனக் கூறப்படும் பிரிவினர் இங்கு இருத்தலாகாது. சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் இந்தியாவுக்கு அனுப்பப்பட வேண்டியவர்களை இந்தியாவுக்கு அனுப்பிவிட்டு, எஞ்சியவர்களுக்கு இலங்கைப் பிரஜாவுரிமை வழங்குவதன்மூலம் இப்பிரச்சினையை இலகுவாகத் தீர்க்கலாம். எஞ்சியிருப்பவர்களின் எண்ணிக்கை சிறிது அதிகரித்திருந்தாலும், இப்பிரச்சினைக்குத் தீர்வு காணும்முகமாக அவர்களுக்குப் பிரஜாவுரிமை வழங்குவதை இந்த மீஉயர் சங்கசபை எதிர்க்காது என இத்தால் வெளியிடுகிறது.

எதிர்காலத்தில் ஆட்களைக் குடியமர்த்தல் முழுநாட்டினதும் சனவிகிதாசாரத்திற்கு இணங்கவென்பதை அரசு ஏற்றுக் கொண்டிருப்பதால், பிரஜாவுரிமை பெறுவோர் குடியமர்த்தப்படவேண்டியது அவர்கள் தோட்டங்களுக்கு வெளியே வசிக்கின்றுர்களென்றுல் இந்த அடிப்படையிலாகும். சட்டவிரோதமாக வடக்கில் தங்கியிருப்பவர்கள் இவ்விகிதாசார அடிப்படையில் வசிப்பதற்கு இடமளித்து எஞ்சியோர் வேறு பிரதேசங்களில் குடியமர்த்தப்படவேண்டும்."

கௌரவ சபாநாயகர் அவர்களே ! நான் முதலாவதாக, 1986 ஜனவரி 20 ஆந் திகதி டெயிலி நியூஸ் பத்திரிகையிலிருந்து சில பிரிவுகளை வாசிக்க விரும்புகிறேன். மேதகு ஜனதிபதி அவர்கள் கம்பஹா ரத்னவலி மகளிர் வித்தியாலயப் பரிசளிப்பு விழாவில் ஆற்றிய உரையின் ஒரு பகுதி இதுவாகும்.

"நாம் சுதந்திரம் பெற்ற நேரத்தில் மக்களனைவரும் பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் பிரஜைகளாயிருந்தார்கள். 1947 தேர்தலின்போது அவர்களெல்லோரும் வாக்குரிமையை உபயோகித்தார்கள். சில இந்தியர்களும் பாராளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட்டார்கள். அப்புத்தளைத் தொகுதிக்கு ஒரு வெள்ளைக்காரர் தெரிவு செய்யப்பட்டார். பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் கீழ் சகல மக்களுக்கும் வாக்குரிமை இருந்தது. அதனால் தேர்தலில் போட்டியிட முடிந்தது."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அமரர் திரு. டி. எஸ். சேனநாயக்கா பிரஜாவுரிமைச் சட்டமூலமொன்றைக் கொண்டு வந்தார். அதற்கிணங்க, முதன்முதலாக இலங்கைப் பிரஜாவுரிமை பெறுபவர் எப்படிப்பட்டவர் என்பது தீர்மானிக்கப்பட வேண்டியதாயிற்று. அந்தக் காலத்தில் இந்தியர்கள் லட்சக்கணக்கானோர் இங்கு வசித்தனர். சிலர் பிரஜாவுரிமை பெறமுடிந்தது. அதாவது வேறு விடயங்களுக்கு மேலதிகமாக அவர்களால் அவர்களின் பெற்றோரும், அப்பெற்றோரின் பெற்றோரும் இலங்கையில் பிறந்தவர்களென நிரூபிக்கமுடிந்தது. இச்சட்டம் கொண்டுவரப்பட்டது எஞ்சிய மக்களை இந்தியர்களாக்குவதற்காகும். அதற்கிணங்க இச்சட்டமூலத்தின் கீழ் சுமார் 10 லட்சம் நாடற்றவர்கள் இந்தியர்களாகவோ, இலங்கையர்களாகவோ பதிவுசெய்யப்பட வேண்டும்.

தாயோ, தந்தையோ இல்லாத பிள்ளையை என்னிடம் கொடுத்தால் நான் என்ன செய்வது ? நான் அப்பிள்ளையை கடலில் வீசவா ? புதைக்கவா ? சுட்டெரிக்கவா ? கொல்லவா ? நான் அப்பிள்ளையைப் பராமரிக்க வேண்டும். மனிதாபிமான உணர்வுடன் செயல்பட வேண்டும். நாம் இவர்களில் பாதிப்பேரை ஏற்றுக்கொள்வதாக வாக்குறுதி அளித்தோம். மற்றப் பாதிப் பேரை அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். அதுதான் முடிவு. அதிலுள்ள குற்றமென்ன ? இந்த லட்சம் பேரை இந்திய அரசாங்கமோ, வேறு எந்த அரசாங்கமோ ஏற்றுக்கொள்ளாவிட்டால் அவர்களை நாம் தெய்வத்திடம் ஒப்படைப்பதா ? எந்த அரசாங்கம் அதிகாரத்திற்கு வந்தாலும் அந்த லட்சம் பேரும் இங்கேயே இருப்பார்கள். அவர்களை உணவின்றி, தொழிலின்றி பிரஜாவுரிமையின்றி வைத்திருக்கமுடியுமா ? அப்படியென்றால் அவர்களை பயங்கரவாதிகளின் மடிக்குத் தள்ளுகிறோமில்லையா ? மனிதப் பண்புகளுள்ள ஒரு அரசாங்கம், பௌத்த கொள்கைகளைப்பின்பற்றும் தலைவர்களுள்ள ஒரு அரசாங்கம் - கிறிஸ்தவ, இஸ்லாமிய, இந்து சமயத்தவர் உள்ள அரசாங்கம், நாதியற்ற மக்களை அந்தரிக்க விடாது.

கௌரவ சபாநாயகர் அவர்களே !

எமது அரசாங்கம் இந்தப் பிரச்சினையை அணுகுவது இந்த விதமாகத்தான். இந்தியர் குடியேற்றம் இன்று நேற்று ஏற்பட்ட நிகழ்ச்சியன்று. இது இந்தியாவுக்கும், இலங்கை போன்ற அயல்நாடுகளுக்கும் மாத்திரம் வரையறுக்கப்பட்ட தொன்றல்ல. 1986 ஜனவரி 19 ஆந் திகதி வெளிவந்த ' ஏசியா வீக் ' சஞ்சிகையைப் பாருங்கள். இந்தியர்கள் உலகின் பல்வேறு நாடுகளில் குடியேறிய விதத்தை அதில் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| நேபாளம் | 38,00,000 |
| மலேசியா | 11,70,000 |
| இலங்கை | 10,28,000 |
| ஐக்கிய இராச்சியம் | 7,19,000 |
| மொரிசியஸ் | 6,97,000 |
| கயனு | 5,00,000 |
| ஐக்கிய அமெரிக்கா | 4,40,000 |
| திரினிடாட், டோபேகோ | 4,21,000 |
| பீஜித் தீவுகள் | 3,26,000 |
| ஐக்கிய அராபிய எமிரேட்ஸ் | 2,50,000 |
| வேறு நாடுகள் | 22,93,000 |
| மொத்தம் | 1,16,44,000 |

இந்தியர்கள் இலங்கைக்கு வரத்தொடங்கியது பத்தொன்பதாம் நூற்றுண்டு ஆரம்ப காலத்திலிருந்தாகும். அதன் பிறகு இலங்கையின் பொருளாதார வளர்ச்சியுடன் இணைந்து இக்குடியேற்றம் நிகழ்ந்தது. அன்றைய காலனித்துவ ஆட்சியாளர்களுக்கு வீதி அமைப்பு, புகையிரதப் பாதை அமைப்பு, அரசாங்கக் கட்டட வேலைகள் என்பனவற்றிற்கு தொழிலாளர் தேவைப் பட்டனர். 1830 ஆம் ஆண்டளவில் பிரித்தானிய முதலீட்டாளர்கள் மலைநாட்டில் கோப்பிச் செய்கையை ஆரம்பித்தனர். அந்த வேலைகளுக்கு குறைந்த சம்பளத்தில் அங்கும் இங்கும் கொண்டு செல்லப்படக்கூடிய உழைப்பாளர்கள் தேவைப்பட்டனர். அந்த விதமானவர்கள் இலங்கையில் இருக்கவில்லை. ஆனல் தென் இந்தியாவில் இருந்தனர். அவர்கள் இலங்கையில் வேலை செய்வதற்கு மாத்திரமல்ல, மலாயா, பர்மா, மொரிசியஸ், மேற்கிந்தியத் தீவுகள் என்பவற்றிலும் குறைந்த சம்பளத்தில் வேலைக்கமர்த்தப்பட்டனர். அண்மைக் காலத்தில் இலங்கையில் வசிக்க வந்த இந்திய வம்சாவழியினரின் எண்ணிக்கையின் வளர்ச்சி 1911லிருந்து 1981 வரை எவ்விதம் ஏற்பட்ட தென்பதை இவ்வட்டவணை காட்டுகின்றது.

| | | | |
|---|---|---|---|
| 1911 | குடிசன மதிப்பீடு | 5,63,700 | |
| 1921 | ,, | 6,35,700 | |
| 1946 | ,, | 8,16,200 | |
| 1953 | ,, | 10,21,600 | |
| 1963 | ,, | 11,77,400 | சிறி லங்கா சுதந்திர |
| 1971 | ,, | 12,02,000 | கட்சி அரசாங்கத்தின்போது |
| 1981 | ,, | 8,18,700 | (குறைவுக்குக் காரணம் மீண்டும் தாயகம் அனுப்பப் பட்டதனுலும் பிரஜாவுரிமை வழங்கப்பட்டதனுலுமாகும்) |

(மேற்காணும் விபரம்—குடிசன, புள்ளிவிபரத் திணைக்கள அறிக்கைகளிலிருந்து)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கௌரவ சபாநாயகர் அவர்களே,

1930 ஆம் ஆண்டைப் போன்ற அண்மைக் காலத்திலும் தொழிலாளர் பற்றுக்குறை எவ்வளவு இருந்ததென்றால், இந்தியாவிலிருந்து தொழிலாளர்களை வரவழைக்கும் தீர்மானமும் கொண்டுவரப்பட்டது. 1932 இல் அரசாங்க சபையில் திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா இவ்விதம் கூறியுள்ளார். நெல் வேளாண்மையைப் பற்றிக் குறிப்பிடும்பொழுது கூறியதாவது:—

". . . . . . . ஆரம்ப வேலைகள் செய்து முடிக்கப்பட்டபின், தொழிலாளர்களைத் தேடிக்கொள்ள நாம் எடுத்த முயற்சிகள் தோல்வியடைந்தமையால், அவ்வேலைக்கு அவசியமான போதிய தொழிலாளர்களைத் தென் இந்தியாவிலிருந்து வரவழைக்க முடியாதென நான் கருதவில்லை."

". . . . . . முன்குறிப்பிட்ட ஆரம்ப முயற்சியைப் பற்றியதாகும். இந்தியா தவிர்ந்த வேறேதேனும் நாட்டிலிருந்து கொண்டுவரப்படவேண்டிய தொழிலாளர்களைப் பற்றியதாகும். அவ்வேலைகள் முடிக்கப்பட்டதும் விவசாயிகளை அக்காணிகளில் குடியமர்த்துவோம்."

(ஹன்சாட்—1932 நவம்பர் 3)

இலங்கை சுதந்திரம் பெற்றபின் நிறைவேற்றப்பட்ட முதற் சட்டம் இலங்கைப் பிரஜாவுரிமைச் சட்டமாகும். அதற்குமுன் நாமெல்லோரும் பிரித்தானிய பிரஜைகளாகவே இருந்தோம். பிரஜாவுரிமைச் சட்டத்தின்கீழ் பிரஜாவுரிமை பெற தகைமை, தம் பெற்றோர்களும், அவர்களின் பெற்றோர்களும் இலங்கையில் பிறந்தவர்களாதலும் வேண்டும்.

இவ்விதமான கடுமையான தகைமை அவசியமாகியது. அவ்விதம் செய்தது தொழிலுக்காக மாத்திரம் இந்நாட்டுக்குக் கொண்டுவரப்பட்ட, இந்தியாவைத் தம் தாய்நாடாகக் கருதிய சுமார் எட்டுலட்சம் இந்தியர்கள் இந்நாட்டில் இருந்ததனாலாகும். இலங்கைப் பிரஜாவுரிமைச் சட்டத்தின் கீழ் இவர்களில் சுமார் 10,000 பேர் மாத்திரமே வம்சாவழிப் பிரஜாவுரிமை பெற்றுக் கொள்ளத் தகுதி பெற்றிருந்தனர்.

எனினும், இவ்விந்தியத் தொழிலாளர்கள் இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவியிருந்தமையால் இலங்கையைத் தம் தாயகமாகக் கொள்ளும் இந்தியத் தொழிலாளர்களுக்கு பிரஜாவுரிமை வழங்கப்படவேண்டுமெனக் கருதப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1949 இல் இந்திய-பாகிஸ்தானியர் (பிரஜாவுரிமைச்) சட்டம் நிறைவேற் றப்பட்டது. இச்சட்டத்தின் கீழ் பிரஜாவுரிமை கோரி எட்டு லட்சத்துக்கு மேற்பட்டோர் விண்ணப்பஞ் செய்தனர். இவர்களில் 1,34,320 பேருக்கு பிரஜாவுரிமை வழங்கப்பட்டது.

இந்திய-பாகிஸ்தானியர் (பிரஜாவுரிமைச்) சட்டம் நிறைவேற்றப்பட்ட பொழுது இலங்கை அரசாங்கத்திற்கும் இந்திய அரசாங்கத்திற்குமிடையில் இச்சட்டத்தின்கீழ் பிரஜாவுரிமை பெற்றுக்கொள்ளாத இந்தியத் தொழிலாளர் இந்தியாவுக்குத் திருப்பி அனுப்பப்படுவர் என்பதில் தெளிவான விளக்கம் இருந்தது. அந்த நேரத்தில் நாடற்ற நிலைமை என்ற பிரச்சினை இருக்கவில்லை. எனினும் 1952 இல் இலங்கையில் இந்திய ஹைகமிஷனராகவிருந்த திரு. சி. சி. தேசாய் புதியதொரு தர்க்கத்தை முன்வைத்தார். இவர்கள் இந்தியர்களல்லர் என்றும் அவர்கள் இந்திய கடவைச்சீட்டுக்கு விண்ணப் பித்து அதனைப் பெற்றிருந்தாலன்றி அல்லது அவர்கள் மீண்டும் இலங்கைக் குத் திரும்ப நாம் கடவைச்சீட்டை வழங்கினாலன்றி அவர்கள் இந்தியாவுக் குச் செல்ல அனுமதிக்கப்படமாட்டார்கள் என்றும் அவர் கூறினார்.

1953 இல் திரு. டட்லி சேனநாயக்க, நேரு அவர்களுடன் இலண்டன் மாநகரில் பேச்சுவார்த்தை நடத்தினார். திரு. டட்லி சேனநாயக்க, இந்திய-பாகிஸ்தானியர் (பிரஜாவுரிமைச்) சட்டத்தின்கீழ் சுமார் 4 இலட்சம் பேர் பிரஜாவுரிமை பெறத்தகைமை பெறுவர் என ஊகித்தார். மேலும், இலங்கை யில் பத்து வருடங்களுக்கு தொழில்புரிய சுமார் 2½ லட்சம் பேருக்கு இடமளிப்பது சம்பந்தமாகவும் எஞ்சிய 3 லட்சம் பேரை கூடிய விரைவில் இந்தியாவுக்கு அனுப்புவது என்பது சம்பந்தமாகவுமே பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. இப்பேச்சுவார்த்தைகள் எவ்வித பலனையும் தரவில்லை.

1954 ஜனவரி மாதத்திலும் ஒக்தோபர் மாதத்திலும் சர் ஜோன் கொத்தலாவலை ஸ்ரீ நேருவுடன் இரு பேச்சுவார்த்தைகளை நடத்தினார். அப் பொழுது இணக்கம் காணப்பட்ட பிரதானமான மூன்று விடயங்களாவன :—

(அ) இந்நாட்டுக்கு சட்டவிரோதமாக வந்தவர்களை இந்தியாவுக்கு அழைத் துக்கொள்ள இந்தியா தனது ஒத்துழைப்பை வழங்கல் ;

(ஆ) இந்திய பிரஜாவுரிமைகோரி விண்ணப்பிக்கும் இந்திய வம்சாவழியி னரை இந்தியப் பிரஜைகளாக இந்திய ஹைகமிஷனர் அலுவலகத் தில் பதிவுசெய்தல் ;

(இ) இந்திய-பாகிஸ்தானியர் (பிரஜாவுரிமைச்) சட்டத்தின் கீழ் பிரஜா வுரிமை வழங்கும் நடவடிக்கையை துரிதப்படுத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரஜாவுரிமை வழங்கும் நடவடிக்கையை இரு நாடுகளும் செய்துமுடித்ததும், இவ்விடயத்தை மீளாய்வதென்பதில் இணக்கம் காணப்பட்டது. இந்த ஒப்பந்தத்தின்கீழ் 54,000 தோட்டத் தொழிலாளர்கள் இந்தியப் பிரஜைகளாகப் பதிவு செய்யப்பட்டு இந்தியாவுக்குச் சென்றனர். 1963 இல் இலங்கை இச்சட்டத்தின் கீழ் பிரஜாவுரிமை வழங்கும் வேலையைப் பூர்த்திசெய்தது.

இப்பிரச்சினை தற்போதைய உருவத்தைப் பெறத் தொடங்கியது 1964 ஆம் ஆண்டில். அதற்குக் காரணம் நாடற்ற ஆட்களின் பிரச்சினை தீர்க்கப்படாமலிருந்ததாகும். திருமதி பண்டாரநாயக்க, திரு. லால்பகதூர் சாஸ்திரியுடன் பேச்சுவார்த்தை நடாத்தி 1964 இல் சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. இவ்வொப்பந்தத்தின்கீழ் 3,00,000 பேருக்கும் அவர்களின் இயற்கைப் பெருக்கத்திற்கும் இலங்கைப் பிரஜாவுரிமை பெற்றுக்கொடுக்கவும், 5,25,000 பேரையும், அவர்களின் இயற்கையான பெருக்கத்தையும் இந்தியாவுக்கு அனுப்பவும் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது. சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தை ஐக்கிய தேசியக் கட்சி எதிர்க்கவில்லையென்பதை இங்கு வலியுறுத்திக்கூற விரும்புகிறேன். இந்த நாடற்ற மக்களின் மனிதப் பிரச்சினைக்கு ஒரு முடிவு காணுவதை நாங்கள் விரும்பினோம்.

கௌரவ சபாநாயகர் அவர்களே ! இந்திய வம்சாவழி மக்களாகிய இவர்கள் இந்நாட்டிலே பரம்பரை பரம்பரையாக வாழுகிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியும். எமது பொருளாதாரத்தை வளமாக்கி, எமது நாட்டின் அபிவிருத்திக்கும் இவர்கள் உதவியிருக்கிறார்கள். நான் ஏற்கனவே கூறியதுபோல சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தின் பிரதான நோக்கம் தாமே விரும்பி தாயகம் திரும்புவதேயொழிய கட்டாயப்படுத்தி அவர்களை அனுப்புவதல்ல.

நான் மீண்டும் குறிப்பிடுவதென்னவென்றால் சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தம் தானாகவே விரும்பி நாடு திரும்புவதைத்தான் குறிப்பிடுகின்றது. கட்டாயமாக நாடு திரும்புவதையல்ல. துரதிஷ்டவசமாக 6,00,000 பேருக்குப் பதிலாக 5,06,000 பேரே இந்தியாவுக்குத் திரும்பிச் செல்ல விரும்பினார்கள். எனவே, இப்பொழுது எமக்குப் பிரச்சினையாக எழுந்திருப்பது, இந்தியாவுக்குப் போக விரும்பாத, இலங்கையைத் தாயகமாகக் கொள்ள விரும்பும் 94,000 பேராகும். இது முக்கியமானது. ஒப்பந்தப்படி கட்டாயமாக என்றால், அவர்களை மூட்டை முடிச்சுடன் அனுப்பிவிடலாம், அவர்களை இந்தியக் கடலில் தள்ளிவிட்டு, என்ன நடக்கிறதென்று பார்த்துக்கொண்டிருக்கலாம். கௌரவ சபாநாயகர் அவர்களே! திருமதி சிறிமா பண்டாரநாயக்கா அரசாங்கம் பிரார்த்தனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயக்கத்திற்கு அடிபணிந்து 94,000 நாடற்றவர்களுக்கு பிரஜாவுரிமை வழங்குகிறது என்று அண்மையில் கூறியிருக்கிறுர். கட்டளைக்கு செயல்படுவதிலும் பார்க்க பிரார்த்தனைக்கு விட்டுக் கொடுப்பது நல்லதில்லையா என்று அவரைக் கேட்க விரும்புகிறேன். அவர் சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டது மக்களின் அபிப்பிராயத்தைக் கேட்டறிந்தா — மக்கள் வரத்தைப் பெற்ரு ? என்று கேட்க விரும்புகிறேன். சிறமா-சாஸ்திரி ஒப்பந்தத்தில் பிரஜாவுரிமை வழங்கியது 3,75,000 பேருக்கு. அதாவது 94,000 போன்று நாலுமடங்கினருக்கு.

இன்று எதிர்க் கட்சியிலிருக்கும் கௌரவ பிரதிநிதிகளுக்கு ஒன்றை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். ஒரு தேசியப் பிரச்சினையின் மீது ஒரு நிலைப்பாட்டை வகிக்கும்பொழுது அதனை நாம் தூரதிருஷ்டி நோக்குடன் செய்யவேண்டும். நான் அப்படிச் சொல்வது, எப்போதாவது நீங்கள் அதிகாரத்திற்கு வரும்பொழுது, இன்று நீங்கள் வகிக்கும் நிலைப்பாட்டை அன்றும் இதே விதத்தில் வைத்துக்கொள்ளக் கூடிய நிலைப்பாடாக இருக்கவேண்டும் என்பதனுல்தான், உங்களுக்கு மக்கள் மீண்டும் அதிகாரத்தைக் கையளிக்க மாட்டார்கள் என்பது வேறு. அதனை நான் அறிவேன், ஆம் உங்களுடைய நேர்மையீனத்தை மக்கள் அறிவார்கள்.

கௌரவ சபாநாயகர் அவர்களே! சிறி லங்கா சுதந்திரக் கட்சியின் மேலிடங்களிலிருந்து இனவாதக் கோஷங்கள் எழுவது எனக்குக் கேட்கிறது. அவர்கள் மலைப் பிரதேசங்களில் வாழும் சிங்கள மக்களை தமிழ்த் தோட்டத் தொழிலாளரைத் தாக்கத் தயாராகுமாறு நாடு முழுவதும் போய் பிரசாரம் செய்கிருர்கள். 1986, ஜனவரி 23, வியாழக்கிழமை 'ஹிந்து' பத்திரிகையிலிருந்து வாசிக்க விரும்புகிறேன்.

கௌரவ சபாநாயகர் அவர்களே, நான் ஒழுங்காக 'ஹிந்து' பத்திரிகையை வாசிப்பதுண்டு. இச் செய்திக்கு மறுப்பை நான் காணவில்லை. 1986, ஜனவரி 23 ஆந் திகதி ஹிந்து பத்திரிகை என்னிடம் இருக்கிறது. இதில் குறிப்பிட்டிருப்பதாவது.

" யுத்தத்திற்கு " தயாராகுங்கள் — சிங்களவருக்கு சிறிமா கூறுகிருர் (கொழும்பு ஜனவரி 22.)

முன்னுள் பிரதமரும் சிறி லங்கா சுதந்திரக் கட்சியின் தலைவியுமான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா, மத்திய மலைப் பிரதேசங்களில் வாழும் சிங்கள மக்களை இந்திய வம்சாவழித் தமிழ்த் தோட்டத் தொழிலாளர்களுக்கெதிராக ஒரு "யுத்தம்" செய்யத் தயாராகுமாறு அறை கூவியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடற்ற தமிழ் மக்களுக்கு பிரஜாவுரிமை வழங்க அரசு எடுத்த முடிவின் காரணமாக நுவரெலியா, பண்டாரவளை, மொனருகலையில் மாத்திரமல்ல இரத்தினபுரியிலிருந்துகூட தமிழ்ப் பிரதிநிதிகள் பாராளுமன்றத்திற்கு வர முடியுமென்று, புத்தாண்டில் ஜனாதிபதி மன்னிப்பு மூலம் குடியியல் உரிமையை மீண்டும் பெற்ற திருமதி பண்டாரநாயக்கா விடுத்த எச்சரிக்கை " இனவாத, வன்செயல்களைத் தூண்டிவிடுவதாகும் " என அரசியல் அவதானிகள் கருதுகிறார்கள்.

செவ்வாய்க்கிழமை பெல்மதுல்லையில் கட்சிப் பொதுக்கூட்டத்தில் "இன்று வடக்கிலிருந்து எம்மைத் தாக்குகிறார்கள். அதுபோதாதென்று மலைப் பிரதேசத்திலும் எம்மைத் தாக்கத் தொடங்கினால் சிங்களவர் கடலில் குதிக்கத்தான் நேரிடும்" என்று அவர் பேசியிருப்பதாக பத்திரிகைகளில் பிரசுரிக்கப் பட்டுள்ளது.

கௌரவ சபாநாயகர் அவர்களே !

1964 இல் சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தைக் கைச்சாத்திட்டபொழுது இந்த விதமாக மக்களைத் தூண்டிவிட எங்களுக்குச் சக்தியிருந்தது. ஆனால் இவ்வித மோசமான அரசியலில் இறங்கவில்லை. ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்தவர்களான நாம் அவ்வளவு வஞ்சகர்கள் அல்ல. நாம் நம்புவதும், பேசுவதும், செயல்படுவதும் முழுநாட்டின் நலனுக்காகவே.

கௌரவ சபாநாயகர் அவர்களே ! சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தின் பிரதான அம்சங்கள் யாவை ? இவ்வொப்பந்தம் எந்த அளவுக்கு அமுல் நடத்தப் பட்டிருக்கின்றது என்று பரிசீலனை செய்து பார்ப்போம். 1964 ஒக்தோபர் மாதத்தில் சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தம் தயாரிக்கப்பட்ட காலத்தில் இந்தியாவும் இலங்கையும் தம் பிரஜைகளென்று கருதப்படாத 9,75,000 பேர் இந்நாட்டில் இருந்ததாக உத்தேசிக்கப்பட்டது. அந்த எண்ணிக்கையில் 9,00,000 பேர் தோட்டங்களிலும் 75,000 பேர் நகரப் பிரதேசங்களிலும் இருந்தார்கள் எனக் கருதப்பட்டது. 1964 ஒக்தோபர் 30 ஆந் திகதி கையொப்பமிடப்பட்ட சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தில் 9,75,000 பேரில் 3,00,000 பேருக்கு இலங்கைப் பிரஜாவுரிமை வழங்கவும், 5,25,000 பேருக்கு இந்திய பிரஜாவுரிமை பெற்றுத்தந்து இந்தியாவுக்கு அனுப்பவும் இணக்கம் காணப்பட்டது. வருடந் தோறும் 35,000 வீதம் இந்தியாவுக்கு அனுப்பும் 15 வருட ஒப்பந்தம் செயல்படுத்தப்பட இணக்கம் பெறப்பட்டிருந்தது. இந்தியாவுக்குச் செல்பவர்களுக்கு அவர்களின் சேமலாப நிதிப் பணம், பணிக்கொடை, சொத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைத்தையும் எடுத்துச்செல்ல இடமளிக்கப்பட்டிருக்கின்றது. இலங்கைப் பிரஜாவுரிமை வழங்குவது, இந்தியாவுக்கு திருப்பி அனுப்பப்படும் முறைக் கிணங்க என ஏற்பாடாகியிருந்தது. இந்தியாவுக்கு ஏழு பேரை அனுப்பும் பொழுது இலங்கைப் பிரஜாவுரிமை 4 பேருக்கு விகிதாசாரப்படி வழங்க வேண்டும். எஞ்சிய 1,50,000 பேரை என்ன செய்வதென்பது பற்றிய பிரச்சினை பின்னர் தீர்மானிக்கப்படவிருந்தது.

1974 ஜனவரி 27 ஆந் திகதி ஒப்பந்தஞ் செய்துகொள்ளப்பட்ட சிறிமா-இந்திரா ஒப்பந்தத்தின் கீழ் 1,50,000 பேரில் இலங்கை 75,000 பேருக்கு பிரஜாவுரிமை வழங்கவும் 75,000 பேரை இந்தியாவுக்கு அனுப்பவும் இணக்கம் காணப்பட்டது. அதற்கிணங்க இலங்கை பொறுப்பேற்ற முழுத் தொகையினர் 3,75,000 பேராவர். அன்று இந்த விதமாக, மேலும் 75,000 பேருக்கு இலங்கைப் பிரஜாவுரிமை வழங்க முயன்றபொழுதும், அந்த நடவடிக்கையிலிருந்து நியாயமற்ற அரசியல் பயன்பெற நாம் முயலவில்லை.

அப்பொழுது, நாம் சொன்ன இரு ஒப்பந்தங்களின் கீழ் 9,75,000 முழுத்தொகையில் 3,75,000 பேருக்கு இலங்கைப் பிரஜாவுரிமை வழங்கவும் 6,00,000 பேருக்கு இந்திய பிரஜாவுரிமை பெற்றுக்கொடுத்து இந்தியாவுக்கு அனுப்பவும் முடிவுசெய்யப்பட்டது. 1964 ஒக்தோபர் 30 ஆந் திகதியின் பின்னர் 9,75,000 மக்களுக்குப் பிறக்கும் பிள்ளைகள், பேரப்பிள்ளைகளுக்கு — (இயற்கை வளர்ச்சி — அல்லது கணக்கிடப்படாதது என்றே குறிப்பிடப் பட்டிருந்தது) அவர்களின் பெற்றோருக்குப் போன்றே இலங்கைப் பிரஜாவுரிமை அல்லது இந்தியப் பிரஜாவுரிமை பெற்றுத்தர இணக்கம் ஏற்பட்டது.

ஒப்பந்தத்திற்கு அனுகூலமாக பிரஜாவுரிமை வழங்க இந்தியாவில் அப்பொழுதும் சட்டதிட்டங்கள் இருந்தன. இலங்கையில் புதிய சட்டங்களை நிறைவேற்ற வேண்டியிருந்தது. இந்தோ-இலங்கை ஒப்பந்த (செயற்பாட்டு)ச் சட்டமூலம் 1967 ஜூன் 20 ஆந் திகதி நிறைவேற்றப்பட்டது. இச்சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் 1968 மார்ச் மாதத்தில் நிறைவேற்றிக்கொள்ளப்பட்டன. பிரஜாவுரிமை பெற்றுக்கொள்வதற்காக இந்திய தூதுவராலயமும் இலங்கை அதிகாரிகளும் ஒரே தினத்தில் 1968.04.01 ஆம் திகதியன்று விண்ணப்பங் களைக் கோரின. இவ்வேலைக்கு இரண்டு வருடகாலம் ஒதுக்கப்பட்டது. அந்தக் காலகட்டத்திற்குள் இலங்கை அதிகாரிகளுக்குக் கிடைத்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை 6,25,000 ஆகியது. அதாவது, சிந்திக்கப்பட்ட எண்ணிக்கைக்கு மேலதிகமாக 2,50,000 பேர் விண்ணப்பித்திருந்தனர். இந்தியாவுக்கு கிடைத்த விண்ணப்பங்கள் எதிர்பார்த்த கணக்கிற்கு, 2,00,000 குறைவாகும். ஒப்பந்தத்தை அமுல்நடத்துகையில் இலங்கை 6,25,000 விண்ணப்பங்கள் தொடர்பாக அவசிய நடவடிக்கைகளை எடுத்தது. இலங்கைப் பிரஜாவுரிமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கும்பொழுது பின்பற்றப்படவேண்டிய நடைமுறை என்னவென்பதை அப்பொழுது முடிவுசெய்திருந்தமையால் அத்தகைமைகளின்மீது பிரஜாவுரிமை வழங்கிய, இன்னுமொரு விதத்தில் சொன்னல் பிரஜாவுரிமை வழங்கத் தீர் மானிக்கப்பட்ட எண்ணிக்கை 3,75,000 ஆகியது. எஞ்சிய விண்ணப்பதாரி களுக்கு அவர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டனவெனத் தெரிவிக் கப்பட்டது. விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டனவெனத் தெரிவிக்கப்பட்டவர் களில் சிலர், பின்னர் இந்திய பிரஜாவுரிமை வழங்குமாறு கோரி இந்திய தூதுவராலயத்திற்கு விண்ணப்பித்தனர். அதற்கிணங்க இந்திய பிரஜாவுரிமை கோரியவர்களின் முழுத்தொகை 4,00,000 லிருந்து 5,06,000 ஆக அதிகரித்தது. எனினும் இந்தியாவின் பக்கத்தில் ஆரம்பத்தில் எதிர்பார்க் கப்பட்ட 6 இலட்சத்தைப் பூரணப்படுத்த இன்னும் 94,000 குறைவாகவிருந் தது. இந்த 94,000 பேரும் 1964 ஒக்தோபர் மாதத்தின் பின்னர் அவர்களுக்குப் பிறந்த பிள்ளை, பேரப்பிள்ளைகளுடன் இன்று நாடற்றவர்களாக எஞ்சியிருக்கிறார்கள். கௌரவ சபாநாயகர் அவாகளே, ஒப்பந்தம் இன்றுவரை எந்த அளவிற்குச் செயல்பட்டிருக்கின்றதென்பதை விளங்கிக்கொள்ள கீழ்க் காணும் குறிப்பு உதவும் :—

(அ) இலங்கை

| | | |
|---|---|---|
| (i) | பிரஜாவுரிமை கோரியவர் | 6,25,000 |
| (ii) | வழங்கவுள்ள எண்ணிக்கை | 3,75,000 |
| (iii) | வழங்கப்பட்ட எண்ணிக்கை (இயற்கைப் பெருக்கத்துடன் வழங்கப்பட்ட எண்ணிக்கை 66,500) | 1,97,535 |
| (iv) | 7 : 4 விகிதாசாரப்படி பிரஜாவுரிமையை எதிர்பார்த் திருப்போர் எண்ணிக்கை | **43,153** |

(ஆ) இந்தியா

| | | |
|---|---|---|
| (i) | இந்திய பிரஜாவுரிமை கோரியவர் | 5,06,000 |
| (ii) | வழங்கவுள்ள எண்ணிக்கை | 6,00,000 |
| (iii) | வழங்கப்பட்டவர் எண்ணிக்கை (இயற்கைப் பெருக்கத்தின் பேரில் வழங்கப் பட்டவர் 1,70,582) | 4,21,207 |
| (iv) | இந்தியாவுக்கு அனுப்பப்பட்டவர்களின் எண்ணிக்கை (இயற்கைப் பெருக்கத்தின் பேரில் அனுப்பப் பட்டவர் எண்ணிக்கை —1,23,835) | 3,37,066 |
| (v) | இந்திய பிரஜாவுரிமை பெற்று இன்னும் இலங்கை யிலிருப்போர் | 84,141 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒப்பந்தஞ்செய்து கொண்ட திகதி 1964 ஒக்தோபர் 30 ஆந் திகதி என்பது தெரிந்ததே. 1979 ஒக்தோபர் 30 ஆந் திகதியில் 15 ஆண்டுகளுக்கிடையில் ஒப்பந்தத்தை அமுல்நடத்தி முடிப்பதென்பதே நோக்கமாயிருந்தது. 1974 ஆம் ஆண்டு ஒப்பந்தத்தை அமுல்நடத்த மேலும் 2 ஆண்டுகள் ஒதுக்கப்பட்டன. அதற்கிணங்க அந்த ஒப்பந்த செயற்பாடுகள் பூர்த்திசெய்யப்பட்டிருக்க வேண்டிய நாள் 1981 ஒக்தோபர் 30 ஆந் திகதியாகும். இந்தியாவுக்கு அனுப்பப்படவிருந்தவர்களில் அதாவது 6 லட்சம் பேரில், 3,37,066 பேர், அரைவாசிக்கு மேற்பட்டோர் இந்தியாவுக்கு அனுப்பப்பட்டுவிட்டனர். இந்திய தூதுவராலயத்திற்கு விண்ணப்பித்துள்ளோர் எண்ணிக்கை 5,06,000 பேரில் இந்திய பிரஜாவுரிமை இன்னும் வழங்கப்படவிருப்போர் 84,973 பேராவர்.

கௌரவ சபாநாயகர் அவர்களே ! இலங்கைப் பிரஜாவுரிமையை 3,75,000 பேருக்கு வழங்கவும், 6 லட்சம் பேருக்கு இந்தியப் பிரிஜாவுரிமை வழங்கவும் இரு நாடுகளும் ஒப்பந்தஞ் செய்து கொண்டதிலிருந்தும், இவ் வெண்ணிக்கையை நிர்ணயப்படுத்திக் கொண்டதிலிருந்தும், இவ்வுடன் படிக்கை செயற்படுதல் நிச்சயமாக நடைபெறவேண்டுமென்றே தெரியவருகின்றது. இதனை அமுல் நடத்தும் நடைமுறையைப் பற்றியும் ஒப்பந்தம் குறிப்பிட்டுள்ளது. "அந்த ஒப்பந்தத்தின் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட பிரஜாவுரிமை கோரும் விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை குறைந்தால் தத்தம் பங்கினரின் பொறுப்பைச் செயல்படுத்த வேறுவழிகள் ஆராயப்படும்." இவ்விடயத்தை மேலும் விளக்கி இந்திய வெளிவிவகாரச் செயலாளர் திரு. சி. எஸ். ஜா, எண்ணிக்கை குறைந்தால் இந்திய தூதுவராலய அலுவலர்கள் தோட்டங்களுக்குச் சென்று தொழிலாளர்களை இந்திய பிரஜாவுரிமை கோருமாறு தூண்டப்பட வேண்டுமென்றார்.

நான் இங்கு மீண்டும் மீண்டும் சொல்வதென்னவென்றால் இரு நாட்டு பிரஜாவுரிமை கோரும் விண்ணப்பங்கள் குறையலாம் என்பதை சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தம் அமுல் நடத்தப்படத் தொடங்கிய ஆரம்ப காலத்திலேயே எதிர்பார்க்கப்பட்டதென்பதாகும். அப்படி நடந்தால் தம் பொறுப்புகளை அமுல் நடத்த வேறு வழிமுறைகளைக் கையாள வேண்டுமென்பதை இரு நாடுகளும் ஒத்துக்கொண்டன. இதனை நிலநாட்ட கடந்த ஞாயிற்றுக்கிழமை பத்திரிகைகளில் வெளியிடப்பட்டிருந்த திருமதி பண்டாரநாயக்காவின் அறிக்கையை வாசித்துக் காட்ட விரும்புகிறேன்.

" ஒப்பந்தத்தின் 10 ஆம் வாசகத்தில், இதனை உடனடியாக அமுல் நடத்த வேண்டுமெனவும், இதனைச் செயல்படுத்துவதற்கு அவசியமான நடைமுறைகளை வகுக்கும் வேலை இரு அரசாங்கங்களின் அதிகாரிகளிடம் கையளிக்கப்பட வேண்டுமெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகவே, 10 ஆம் வாசகத்தின் பிரகாரம் இரு அரசாங்க அதிகாரிகளும் 1964 திசெம்பர் மாதம் கொழும்பில் சந்தித்து (ஜா-டயஸ் பேச்சுவார்த்தை) தயாரித்த சிற்சில நடைமுறைகளுக்கு இரு அரசாங்கங்களினதும் அனுமதி கிடைத்தது.

அந்த நடைமுறை இவ்விதமாகும். "

" பிரஜாவுரிமை வழங்குவதற்காக இரு அரசாங்கங்களும் விண்ணப்பங்களைக் கோரவேண்டும். கிடைக்கும் விண்ணப்பங்களின் எண்ணிக்கை ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட எண்ணிக்கையிலிருந்து மிகவும் குறைந்தால் தத்தம் பொறுப் பேற்றலுக்கிணங்கச் செயல்பட ஒவ்வொரு அரசாங்கமும் வேறு நடைமுறைகளை அமுல் நடத்த வேண்டும். "

கௌரவ சபாநாயகர் அவர்களே, சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தம் யதார்த்த ரீதியில், அதே போன்று பேச்சுவார்த்தை அடிப்படையில் செயல்பட்ட தென்பதை இங்கு கூறிவைக்க விரும்புகிறேன்.

இந்திய வம்சாவழி மக்கள் தாம் விரும்பிய விதத்தில் இந்திய அல்லது இலங்கைப் பிரஜாவுரிமை கோர இடமளிக்கப்பட்டனர். அவர்கள் சுயவிருப்பத்தின் பேரில் சமர்ப்பித்த விண்ணப்பங்களுக்கிணங்கவே பிரஜாவுரிமை வழங்கப்பட்டது.

இங்கு இது தொடர்பாகக் கூற வேண்டிய இன்னுமொரு விஷயமுண்டு. இந்தியாவுக்குச் செல்லும் இந்தியர்களுக்கு அரசாங்கம் சகல வசதிகளையும் செய்து கொடுத்துள்ளது. இலங்கையில் அவர்களின் கொடுக்கல், வாங்கல்களை முடித்து, அவர்களுக்குச் சேரவேண்டிய பணம், சம்பள நிலுவை, ஊழியர் சேமலாப நிதிக் கொடுப்பனவு, பணிக்கொடை போன்ற சகல தொகைகளையும் திரட்டிக்கொண்டு அவர்கள் — சேமித்த பணம் இருப்பின் அதனையும் எடுத்துக் கொண்டு — இந்தியாவுக்குச் செல்ல வசதி செய்யப்பட்டிருந்தது. இவ்விரண்டு ஒப்பந்தங்களும் அமுல் நடத்தப்படவிருந்த 17 ஆண்டுக் கால வரையறை 1981 ஒக்தோபர் மாதத்தில் முடிவடைந்து விட்டதால், இவ்விரு வொப்பந்தங்களும் காலாவதியாகிவிட்டன என இந்திய அரசாங்கம் கூறியுள்ளது. இரு கட்சியினரதும் பங்கு அமுல் நடத்தப்படும்வரை அவ்வொப்பந்தங்கள் வலுவில் இருக்கின்றன என்பது இலங்கையின் கருத்தா கும். எவ்விதமிருப்பினும், இந்தியா ஒப்பந்தம் காலாவதியாகி விட்டதெனக் கருதினும், இந்திய பிரஜாவுரிமை கோரியுள்ள 5,06,000 பேருக்கு இந்திய பிரஜாவுரிமை வழங்கி அவர்களைத் தம் நாட்டுக்கு அழைத்துக் கொள்ள இணக்கம் தெரிவித்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கௌரவ சபாநாயகர் அவர்களே !

சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் இந்தியாவுக்கு அனுப்பப்படவேண்டிய வர்கள் 6,00,000 பேர். எனினும், இந்திய பிரஜாவுரிமை கோரியிருப்போர் 5,06,000 பேராவார். இந்தியாவின் பங்கில் குறைந்துள்ள 94,000 பேர் சம்பந்தமாகத் தான் சிக்கல் ஏற்பட்டுள்ளது. எனவே நாம் இந்த 94,000 பேருக்கு இலங்கைப் பிரஜாவுரிமை வழங்க முடிவு செய்தோம். அவ்விதம் செய்வது சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தை மீறுவதாகாது. அனுபவ ரீதியாகவும், சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தில் எதிர்பார்க்கப்பட்ட விதமாகவும் நாம் இவ் விதம் செயல்படுவது அந்த ஒப்பந்தத்தை அமுல்நடத்துவதற்காகும்.

கௌரவ சபாநாயகர் அவர்களே ! திருமதி பண்டாரநாயக்கா ஒத்துக் கொண்ட 3,75,000 பேருக்கு மேலதிமாக 94,000 பேருக்கு பிரஜாவுரிமை வழங்கவே இச்சட்டமூலம் கருதுகின்றது. பிரஜாவுரிமை வழங்குதல் 4 : 7 விகிதாசாரத்திற்கிணங்கவே அமுல்நடத்தப்படும். 2,89,140 பேருக்கு இலங்கை பிரஜாவுரிமை கிடைக்கும்பொழுது—அதற்கேற்ப இந்திய பிரஜாவுரிமை கோரியுள்ளவர்களான 5,06,000 பேருக்கு இந்திய பிரஜாவுரிமை கிடைக்கும். இந்தச் சட்டமூலம் அதனை உறுதிப்படுத்துகிறது.

கௌரவ சபாநாயகர் அவர்களே ! இந்தச் சட்டமூலம் தொடர்பாக எழுப்பப்பட்டுள்ள கண்டனங்களைப் பார்ப்போம். இலங்கையும் இந்தியாவும் பிரஜாவுரிமை வழங்கும்பொழுது பின்பற்றப்படவேண்டிய 4 : 7 விகிதா சாரம் மாற்றப்பட்டிருக்கிறதாம். இப்படிக் கூறுவது தவறு. உண்மையில் இச்சட்டமூலத்திலே நிச்சயப்படுத்தி நிர்ணயித்துள்ள 5,06,000 பேரை இந்தியா பொறுப்பேற்று இந்தியாவுக்கு அனுப்பும்வரை அந்த விகிதா சாரத்தைக் கடைப்பிடிக்க வேண்டும்.

கௌரவ சபாநாயகர் அவர்களே, இந்த 94,000 பேருக்கு இலங்கைப் பிரஜாவுரிமை வழங்கவேண்டிய அவசியமில்லையென்றும் கூறப்பட்டுள்ளது. இவர்களுக்கு அடிப்படை உரிமைகளை வழங்குவதை நாம் சதாகாலமும் மறுக்கப்போகிறோமா ? அதுதான் கேள்வி. இந்த 94,000 பேரும் இந்திய பிரஜாவுரிமைக்கு விண்ணப்பஞ் செய்யாதவர்கள். அதுவே உண்மை. அவர் கள் எம்முடன் வாழ விருப்பம் தெரிவித்திருப்பவர்கள். நாம் இந்த யதார்த்த நிலையை உணர்ந்து செயல்பட வேண்டும். நாம் அவர்களை இந்திய பிரஜாவுரிமைக்கு விண்ணப்பஞ் செய்யுமாறு கட்டாயப்படுத்த முடியாது. எவருக்கும் கட்டாயப்படுத்தி பிரஜாவுரிமை வழங்க முடியாது. இந்த 94,000



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேருக்கும் நாம் இலங்கைப் பிரஜாவுரிமை வழங்காவிட்டால், அவர்கள் நாடற்றவர்களாக தொடர்ந்து வாழ நேரிடும். நாடற்றவர் பிரச்சினையை தொடர்ந்துவைத்துக் கொண்டிருப்பது நம் நாட்டிற்கு நன்மையளிக்காது.

சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட ஒருவர் திருமதி பண்டார நாயக்கா — 4,69,000 பேரை இந்த நாட்டுப் பிரஜைகளாக்கி வைத்துக் கொள்ளப்போகிறோம் என்று பெருங்கோஷமிட்டிருக்கிறார். கௌரவ சபாநாயகர் அவர்களே, நடந்திருப்பது என்னவென்பதை நான் எடுத்துக்காட்ட வேண்டி யிருக்கிறது. 1964 சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தம், 1974 சிறிமா-இந்திரா ஒப்பந்தம் ஆகிய இரு இந்தோ-லங்கா ஒப்பந்தங்கள் மூலம் நாம் ஏற்கனவே 3,75,000 பேருக்கு இலங்கைப் பிரஜாவுரிமை வழங்க பொறுப்பேற்றுள்ளோம். அது மாத்திரமல்ல. 1964 ஒக்தோபர் மாதத்தின் பின் இவர்களுக்குப் பிறக்கும் பிள்ளைகளுக்கும் இலங்கைப் பிரஜாவுரிமை வழங்கக் கட்டுப்பட்டுள்ளோம். மேலும் 94,000 பேருக்கும் 1964 ஒக்தோபர் மாதத்திற்குப் பின் பிறந்த பிள்ளைகளுக்கும் பிரஜாவுரிமை வழங்கவே நாம் இப்பொழுது இந்த நட வடிக்கை எடுக்கின்றோம். திருமதி பண்டாரநாயக்காவின் காலஞ்சென்ற கணவர் இப்பிரச்சினையை ஒரு மனிதாபிமானப் பிரச்சினையாகவே நோக்கினார். இதுபோன்ற ஒரு சந்தர்ப்பத்தில், 1954 நவம்பர் 5 ஆந் திகதி, திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா இவ்விதம் கூறியுள்ளார்.

"ஒன்பது லட்சம் மக்கள் இலங்கையில் உண்மையில் இருக்கிறார்கள். அவர்கள் இந்நாட்டில் இருப்பதனால் ஏற்படக்கூடிய சூழ்நிலையைப் பற்றி நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அவர்களை நாம் ஒரு பெல்சன் சிறை முகாமில் தள்ளிவிட முடியாது. அவர்களைக் கடலில் தூக்கி எறிந்துவிட முடியாது ; அவர்களுக்கு நஞ்சு கொடுக்கவும் முடியாது. வேண்டுமென்றால் தொழில் வழங்காமல் விடலாம். என்றாலும் இந்த விதமான பிரச்சினைகளில் பொறுப் புள்ள ஒரு நாடு அவ்விதம் செயல்படுவதில்லை " நேரு-கொத்தலாவலை ஒப்பந்தத்தைப் பற்றிப் பேசும்பொழுது காலஞ்சென்ற திரு. எஸ். டப்ளியூ. ஆர். டீ. பண்டாரநாயக்கா 1954 மார்ச் 2 ஆந் திகதி பாராளுமன்றத்தில் இவ்விதம் கூறினார்.

"இச்சட்டத்தின் கீழ், ஒரு பக்கத்தில் இலங்கைப் பிரஜைகளாகப் பதிவு செய்யப்படும் கூட்டத்தினர் இருக்கின்றனர். அவ்வெண்ணிக்கை எப்படி யிருந்தபோதிலும், அமரர் திரு. டி. எஸ். சேனநாயக்கா எதிர்பார்த்தபடி 50,000 வரையாகுமென்பதை இங்கு எடுத்துக் காட்ட வேண்டும். அந்தக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணக்குச் சரியாக இருக்கலாம், பிழையாக இருக்கலாம். ஆனல் இலங்கைப் பிரஜைகளாகப் பதிவு செய்யப்பட்ட பின் அவர்கள் இந்த நாட்டின் பூரண பிரஜாவுரிமைகளுள்ள பிரஜைகளாதல் வேண்டும். 'அ' வகுப்புப் பிரஜைகள், 'ஆ' வகுப்புப் பிரஜைகளென்று இரு பிரிவினர் இருக்க முடியாது. அந்தவிதமான திட்டத்தை திரு. டி. எஸ். சேனநாயக்கா சிந்திக்கவில்லை.

1954 இல் கூட, இரு நாடுகளும் பிரஜாவுரிமை வழங்கும் வேலையைப் பூர்த்தி செய்ததும், எஞ்சியிருப்போர் இருப்பின் அவர்கள் இலங்கைப் பிரஜைகளாக ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்ற நிலைப்பாடு இருந்தது. 1954 மார்ச் 2 ஆந் திகதி திரு. எஸ். டப்ளியூ. ஆர். டி. பண்டாரநாயக்கா பாராளுமன்றத்தில் இப்படிக் கூறினர்.

"இறுதியாக, இவர்கள் இந்தியாவுடனுள்ள பாசத்தையும் நட்புறவையும் பற்றிப் பேசுகிருர்கள். இது பாசம், நட்புறவுப் பிரச்சினையன்று. பிரஜைகளாகப் பதிவு செய்த பின் எஞ்சியிருப்பவர்களை இந்த நாடு ஏற்றுக் கொள்ளுமென பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் இந்திய லோக சபையில் திட்டவட்டமாகவும் ஆணித்தரமாகவும் கூறியுள்ளது எனக்கு ஞாபகமிருக்கிறது."

கௌரவ சபாநாயகர் அவர்களே! இந்தியப் பக்கத்தில் 94,000 பேர் குறைந்திருப்பதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். இந்த 94,000 பேரை நாடற்றவர்களாக இங்கு இருக்க இடமளிக்க முடியாது. "நாம் அவர்களை ஒரு பெல்சன் சிறைச்சாலைக்கு அனுப்ப முடியாது. அவர்களைக் கடலில் தள்ளி விட முடியாது. வேண்டுமென்ருல் அவர்களுக்கு வேலை வழங்காது வைத்துக் கொள்ள முடியும். இந்தவிதமான பிரச்சினை சம்பந்தமாகப் பொறுப்புள்ள ஒரு நாடு செயல்படுவது அந்த விதமாக அல்ல."

இந்திய பிரஜாவுரிமை கோரிய 5,06,000 பேருக்கு பிரிஜாவுரிமை வழங்குவதெனவும், 1964 ஒக்தோபர் மாதத்திற்குப் பின் அவர்களுக்குப் பிறந்த பிள்ளைகளையும் அவ்விதமே பிரஜைகளாக்குவதெனவும் சட்டவாக்க, நிர்வாக நடைமுறை மூலமாக உறுதிப்படுத்தியுள்ளோம் என்பதை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். இந்த முழுத் தொகையினரான 5,06,000 பேருக்கு இந்திய பிரஜாவுரிமை வழங்கப்பட்ட பின்னரே, நாம் இந்த 94,000 பேருக்கும் இலங்கைப் பிரஜாவுரிமை வழங்குவோம். 5,06,000 பேருக்கு இந்தியப் பிரஜாவுரிமை வழங்கும் வரை, நாம் இலங்கைப் பிரஜாவுரிமை அளிப்பது 4 : 7 விகிதாசார அடிப்படையிலாகும். அதாவது, இந்தியா 7 பேருக்கு பிரஜாவுரிமை வழங்கியபின் நாம் 4 பேருக்கு பிரஜாவுரிமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்குவோம். கௌரவ சபாநாயகர் அவர்களே ! இப் பிரச்சினைக்கு வேறேதேனும் தீர்வு இல்லை. இவர்களை இந்தியாவில் கட்டாயமாகக் கொண்டு போய் விடுவதற்கு இங்கு பாராளுமன்றம் சட்டமியற்ற முடியாது. இவர்கள் இங்கே பிறந்தவர்கள். இவர்கள் சந்ததி, சந்ததியாக பரம்பரையாக இங்கே வாழ்ந்தவர்கள்.

இவ்வொப்பந்தத்தைத் துரிதமாக அமுல்நடத்துவதற்கு நாம் இரு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. ஒன்று இலங்கைப் பிரஜாவுரிமை வழங்கல். இந்தியப் பிரஜாவுரிமை பெற்றவர்களை இந்தியாவுக்கு அனுப்புதல் இரண்டாவது நடவடிக்கையாகும். இரண்டும் ஒரேவித முக்கியத்துவம் வாய்ந்தவை. இவ்விரு வேலைகளையும் துரிதமாகச் செய்து கொள்ளத் தேவையான ஆளணியையும் வசதிகளையும் திணைக்களத்திற்கு வழங்க ஏற்பாடுசெய்யப்படும். இச்சட்டமூலம் நிறைவேற்றப்பட்டு ஆறு, எட்டு மாதங்களுக்குள், எஞ்சியிருக்கும் விண்ணப்பதாரிகள் 84,793 பேருக்கும் இந்தியப் பிரஜாவுரிமை (முழு எண்ணிக்கை 5,06,000 ஆகும் விதத்தில்) வழங்க இந்திய அரசாங்கம் வாக்குறுதி அளித்துள்ளது. இலங்கைப் பிரஜாவுரிமை வழங்கும் வேலையை நாம் 18 மாதங்களுக்கிடையில் முடிக்க எதிர்பார்த்துள்ளோம். நாம் எமது வேலைப்பொறுப்பை செய்துமுடிப்பது இந்திய அரசாங்கம் தனது பொறுப்பை முடித்துவைக்கும் அடிப்படையில் என்பதை மீண்டும் குறிப்பிடவேண்டும்.

கௌரவ சபாநாயகர் அவர்களே ! ஒரு விடயத்தை நான் இங்கு அழுத்திக்கூற வேண்டும். இன்று நாம் அடிப்படை மனித உரிமைகளை வழங்கக் கருதும் இந்திய வம்சாவழி மக்கள் சட்டவிரோதமாக இங்கு வந்த மக்களல்ல. அந்த மக்கள் இற்றைக்கு 100 க்கும் 150 க்குமிடைப்பட்ட ஆண்டுகளுக்கு முன் இங்கு பிரித்தானியர்களால் அழைத்துவரப்பட்டவர்களாவர். அவ்விதம் பார்க்கும்பொழுது இவர்கள் மாத்திரமல்ல, இவர்களின் தாய், தந்தையரும், பாட்டன்மாரும் — சிலரைப் பொறுத்தமட்டில் அவர்களின் பூட்டன்மாரும் இலங்கையில் பிறந்தவர்கள். சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தை எதிர்க்காததற்குக் காரணம், நாம் இந்த உணர்வுடன் இந்த விடயத்தை அணுகியதனாலாகும். உண்மையில் பாராளுமன்றத்தில் மாத்திரமல்ல, அதற்கு வெளியேயும் அவ்வொப்பந்தத்திற்கு ஒத்துழைப்பு அளித்தோம். சிறிமா-சாஸ்திரி அடிப்படையின்மீது இந்தோ-லங்கா ஒப்பந்த செயற்பாட்டு (திருத்த) மசோதாவிற்கு எமது மேதகு ஜனாதிபதியவர்கள், அன்று, 1967 இல், எதிர்க்கட்சி முதல்வர் என்ற முறையில் ஒத்துழைப்பு நல்கினார். அவரது பேச்சு ஹன்சாட்டிலிருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கௌரவ சபாநாயகர் அவர்களே ! எவராவது ஒருவர் விசா அனுமதிப் பத்திரமின்றி வெளிநாட்டிற்குப் போனல் என்ன நடக்கிறது ? அவரைப் பிடித்து நீதிமன்றத்தில் கொண்டுபோய், குற்றவாளியென நிரூபிக்கப் பட்டால் கட்டாயமாக இலங்கைக்கு திருப்பி அனுப்பப்படுவார். சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட முறை இதுவாகும். பல பரம்பரையாக இந்நாட் டில் எம்மிடையே வசித்த இந்திய வம்சாவழி மக்கள் மீது இம்முறையை செயல்படுத்தமுடியுமா ? இதனை நாம் மனிதரென்ற முறையில் செய்ய முடியுமா ? அவர்களை சட்டவிரோதமாகக் குடியேறியவர்களென்று துப்பாக் கியை நீட்டி வலோத்காரமாக இந்தியாவுக்கு அனுப்பமுடியுமா ? அப்படி இந்தியாவுக்கு அனுப்பினாலும் முறையான பிரயாணக் கடவைச்சீட்டுகளின்றி இந்தியாவில் இறங்க இடமளிக்கப்படுவார்களா ? அவர்கள் திருப்பி அனுப்பப் படுவார்கள்.

கௌரவ சபாநாயகர் அவர்களே, இப்பிரச்சினையை சமாதானமாக, மனிதாபிமான அடிப்படையில், முற்றாக தீர்ப்பதன் மூலம் பல நன்மைகளை நான் காண்கிறேன். ஒருபக்கத்தில் நாம் இதுகாலம் எம்மிடையில் இருந்து வந்த புற்றுநோயை—களங்கத்தை—அகற்றிக்கொள்கிறோம் ; பல தசாப்தங் களாக எம்மை மூடியிருந்த அந்தகார நிழலை அகற்றிக்கொள்கிறோம். காலங்காலமாக சீழ்பிடித்திருந்த புண்ணை சுகப்படுத்திக் கொள்கிறோம். இச்செய லுக்குப் பிரதிபலனாக நாடற்றவர் என்றழைக்கப்படும் இந்த மக்களிடமிருந்து மேலும் நல்ல சேவையைப் பெறமுடியும். அவர்களுக்கு தாம் பாதுகாப்பாக இருக்கிறோமென்ற உணர்வு ஏற்படும். மேலும் தாம் நாடற்றவர்களல்ல, பூரண பிரஜாவுரிமை உள்ளவர்கள் என்பதனால் இந்நாட்டைப்பற்றிய பற்று ஏற்படும்.

இத்தகைய காரணங்களினிமித்தம், அவர்களிடமிருந்து மிகச்சிறந்த சேவையைப் பெறமுடியுமென்பதில் எனக்கு நம்பிக்கையுண்டு. இந்நாட்டில் வாழும் சகல இனத்தவர்களும் ஒற்றுமையாக வாழ வழிவகுப்பது எமது தலையாய நோக்கம் என்பதனால் நாம் இன்று எடுக்கும் இந்த நடவடிக்கை அத்தியாவசியமானது மாத்திரமன்றி சரியான வழியில் அடியெடுத்து வைத் துள்ளோம் என்பதுமாகும். அந்த நடவடிக்கையானது இந்த இந்திய வம்சாவழிமக்களை இலங்கையர் சமுதாயத்தில் ஒன்றிணைக்க உதவும். நம் நாட்டின் அபிவிருத்திக்கு உழைத்த மக்களல்லவா இந்த மக்கள் ? ஒன் றிணைந்த ஐக்கிய இலங்கை-கோட்பாட்டைத் துரிதமாக நனவாக்கு வதற்கு இது உதவும். இதனை நாம் செய்யாவிட்டால், இந்த வெடிப்புகள் மேலும் மேலும் விரிவடைந்து, வெடித்துச் சிதறலாம். இந்த மக்களின் வாக்கு கிடைக்குமா, கிடைக்காதா என்பதைப்பற்றிச் சிந்திக்காது இம்மசோதாவுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒத்துழைப்பு அளிக்கும் சரியான வழியைப் பின்பற்றுமாறு ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியினரைக் கேட்டுக் கொள்ளுகின்றேன். இறுதியாக, கௌரவ சபாநாயகர் அவர்களே ! நான் இதுவரை கூறிய விடயங்களை கேள்வி பதில் என்றமுறையில் கோவைப்படுத்தி மீண்டும் சுருக்கித் தர விரும்புகின்றேன்.

கே : (1) தற்பொழுது பிரஜாவுரிமை வழங்கப்படவிருக்கும் இந்த 94,000 பேரும் யாவர் ?

ப : இவர்கள் சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் இந்தியப் பிரஜாவுரிமை கோரி விண்ணப்பஞ் செய்யாத இந்திய வம்சா வழியினரான நாடற்றவர்களாவர். சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் 4 : 7 விகித அடிப்படையில் இலங்கைப் பிரஜாவுரிமையை 3,75,000 பேருக்கு வழங்கவும், 6,00,000 பேரை இந்தியாவுக்கு அனுப்பவும் ஏற்பாடாகியிருந்தது.

கே : (2) சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தில் இத்தகைய பிரிவைச் சேர்ந்த மக்கள் இருக்கக்கூடுமெனக் கருதப்படவில்லையா ?

ப : உண்மையில், இத்தகைய பிரிவினர் தோன்றமுடியுமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது. சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தில் 10 ஆம் வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, அந்த ஒப்பந்தத்தைச் செயல்படுத்த அவசியமான தகுந்த வழிமுறைகள் இருநாட்டு அதிகாரிகளாலும் வகுக்கப்பட்டிருக்கவேண்டும். 1964 திசெம்பர் மாதத்தில் இந்த அதிகாரிகள் கொழும்பில் கூடி சிற்சில நடைமுறைகளை வகுத்தனர். அவற்றை இருநாடுகளும் அங்கீகரித்தன. அதில் ஒன்று.

"பிரஜாவுரிமை கோரும் விண்ணப்பங்களை இருநாடுகளும் கோருதல் வேண்டும் ; அவ்வவ் நாட்டின் பிரஜாவுரிமை கோரி கிடைக்கும் விண்ணப்பங்களின் எண்ணிக்கை ஒப்பந்தத்தில் நிச்சயிக்கப்பட்ட எண்ணிக்கைக்கு மிகக்குறைவாக இருப்பின் தத்தம் பங்கினை நிறைவேற்றுவதற்காக அந்தந்த அரசாங்கங்கள் வேறு நடைமுறைகளை வகுத்தல் வேண்டும்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கே : (3) இவர்கள் சட்டவிரோதமாகக் குடியேறியவர்களா ?

ப : இல்லை. எவ்விதத்திலும் இல்லை. இவர்களின் மூதாதையர், 100, 150 ஆண்டுகளுக்கு முன் தோட்டங்களிலும், வேறு இடங்களிலும் வேலை செய்வதற்காக தென்னிந்தியாவி லிருந்து இலங்கைக்கு அழைத்து வரப்பட்டனர். இவர்கள் இங்கே பிறந்தவர்கள். இவர்கள் பல பரம்பரையாக இங்கு வாழுகிறார்கள். சிலரின் பெற்றோர் மாத்திரமல்ல, பாட்டன், பூட்டன்மாரும் இலங்கையில் பிறந்தவர்கள்.

கே : (4) இலங்கைப் பிரஜாவுரிமை பெற இவர்களுக்கு சட்டரீதியான உரித்து உண்டா ?

ப : நிச்சயமாக ஆம். அவர்களும், அவர்களின் தாய் தந்தையரும், பாட்டன், பூட்டன்மாரும் இங்கு பிறந்தவர்களாகையால் இந்த நாட்டை வளமாக்க அவர்கள் உழைத்திருக்கிறார்கள். உலகில் எங்கும் 'ஜன்ம உரிமை' என ஒன்றுண்டு. இலங்கையர் ஒருவர் அவுஸ்திரேலியாவில் அல்லது பெரிய பிரித்தானியாவில் பிறந்தார் என்று வைத்துக் கொள்வோம். அவருக்கு அந்த நாட்டில் பிரஜாவுரிமை பெற உரித்துண்டு. எனவே, நாடற்றவர் என்று கூறப்படும் இந்த மக்களுக்கு இலங்கைப் பிரஜாவுரிமைக்கு சட்டரீதியான உரித்து உண்டு.

கே : (5) அவர்கள் ஏன் இந்தியாவுக்கு திரும்பிப்போக விரும்புகிறார் களில்லை ?

ப : இலங்கையை அவர்கள் தம் தாயகமாகக் கொள்ள விரும்பு கிறார்கள். சிலவேளை இந்த நாட்டின் வாழ்க்கை நிலைமை சிறந்ததாகையினாலும், நல்ல சுவாத்தியம் நிலவுவதாலும், இந்தியாவின் புதிய சுற்றாடலுக்கு ஏற்ப தம்மைத் தயார்படுத் திக்கொள்ள கஷ்டமாகையினாலும் இருக்கலாம்.

கே : (6) அவர்களை ஏன் வலுக்கட்டாயமாக இந்தியாவுக்கு அனுப்ப முடியாது ?

ப : அவர்கள் இந்தியப் பிரஜைகள் அல்லாதவர் ஆகையால். அவர்கள் இந்தியாவிலிருந்து சட்டவிரோதமாகக் குடிபுகுந்த வர்களாயின், அவர்களைக் கட்டாயப்படுத்தி திருப்பி அனுப்ப முடியும். அவர்கள் இலங்கையில் பிறந்தவர்களாகையால், அவர்கள் இந்தியாவைச் சேர்ந்தவர்களல்ல என்று இந்தியா கூறுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கே : (7) ஒப்பந்தத்தின் பிரகாரம் 6,00,000 பேரில் 5,06,000 பேரை இந்தியா ஏற்றுக்கொள்ளமுடியுமென்றால், இணங்கியவாறு எஞ்சிய 94,000 பேரை ஏன் ஏற்றுக்கொள்ள முடியாது ?

ப : இலக்கத்தை ஒப்பந்தத்தில் குறிப்பிட்டிருப்பதனால் இந்தியா 6,00,000 பேரை ஏற்றுக்கொண்டதான கட்டாய தன்மை தோற்றமளித்தபோதிலும், செயல்படுத்தும் பொழுது அவ்விதம் நடைபெறவில்லை. அதற்குக் காரணம், இருநாடுகளினதும் இணக்கத்தின் பேரில் விண்ணப்பங்களைக் கோரியது இருநாடுகளும் தனித்தனியேயாகும். இலங்கைப் பிரஜாவுரிமை கோரி 6,25,000 விண்ணப்பங்கள் கிடைத்தன. இந்திய பிரஜாவுரிமைகோரும் விண்ணப்பங்கள் 4,00,000 மாத்திரமே பெறப்பட்டன. அதன் பிறகு முன்னைய எண்ணத்தை மாற்றிக்கொண்டவர்களும் இருந்தனர். சிலர் விண்ணப்பஞ் செய்யுமாறு தூண்டப்பட்டனர். அதற்கிணங்க தற்பொழுது இந்தியாவுக்கு அனுப்பப்படவிருப்பவரின் எண்ணிக்கை 5,06,000 ஆகியுள்ளது. எஞ்சிய 94,000 பேரை இந்தியா பொறுப்பேற்க முடியாது. வலோத்காரமாக கூட்டிச்செல்ல முடியாததால், அவர்களை சிறைக் கைதிகளைப் போல்தான் கொண்டு செல்லமுடியும். மனிதர்களைப் பொறுத்தமட்டில் இந்தக் காலத்தில் அவ்விதம் நடக்க முடியாது.

கே : (8) அவர்களைக் கட்டாயப்படுத்தி அனுப்பினால் என்ன நடக்கும் ?

ப : இவர்கள் இந்தியப் பிரஜைகளல்ல, பிரயாணஞ்செய்ய அனுமதியளிக்கும் கடவைச் சீட்டுகள் இவர்களிடமில்லை. அதாவது இந்தியக் கடவைச்சீட்டு இல்லை. அதனால் இந்தியாவில் இறங்க அனுமதி கிடையாது. எந்த நாட்டிலிருந்து வந்தார்களோ அந்த நாட்டுக்கு திருப்பி அனுப்பப்படுவார்கள்.

கே : (9) நாம் கடவைச் சீட்டைக் கொடுத்து அனுப்பினால் ?

ப : இலங்கையர் அல்லாதவர்களுக்கு பிரயாணக் கடவைச்சீட்டு வழங்க முடியாது. நாம் கடவைச்சீட்டு வழங்கினாலும் இந்தியாவில் நுழைய விசா பத்திரத்தை இந்தியா வழங்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கே : (10) இவர்கள் இலங்கையில் வேருனதோர் இராச்சியத்தை அமைக்க ஒத்துழைப்பு அளிப்பவர்களா ?

ப : இல்லை. பெரும்பாலானோர் மலைநாட்டுப் பிரதேசங்களின் தோட்டத் தொழிலாளர். பெரும்பாலும் சிங்கள மக்கள் வசிக்கும் பிரதேசங்களில் சிங்களவர்களுடன் நல்லுறவோடு வாழுகிருர்கள். அவர்கள் இந்த நாட்டின் ஐக்கியம், ஒருமைப் பாடு, இறைமையை விரும்புபவர்கள்.

கே : (11) அவர்கள் இலங்கைப் பிரஜாவுரிமை கோரி வன்செயலில் ஈடுபடாமல் ஏன் பிரார்த்தனை செய்கிருர்கள் ?

ப : அவர்கள் தம் கோரிக்கைகளை வென்றெடுக்க எப்பொழுதும் அகிம்சை வழியையே கடைப் பிடித்திருக்கிருர்கள். அவர்கள் தம் கோரிக்கைகளை வென்றெடுக்க தொழிற்சங்க நட வடிக்கைகளான பேச்சுவார்த்தை, கலந்துரையாடல், மற்றும் அகிம்சை வழிமூலமே செயல்பட பழகியிருக்கிருர்கள்.

கே : (12) அவர்களின் நியாயமான கோரிக்கைகளை — விசேடமாக அடிப்படை மனித உரிமைகளும், குடியியல் உரிமைகளா யிருக்கும் பொழுது — வழங்குதலில் பிழையேதேனு முண்டா ?

ப : அடிப்படை மனித உரிமைகளையும், தனிமனித சுதந்திரத்தை யும் எமது அரசியலமைப்பு உறுதிப்படுத்தியுள்ளது. பல தலைமுறைகளாக இவர்களுக்குக் குடியியல் உரிமைகள் மறுக்கப்பட்டு வந்துள்ளன. இப்பாரதூரமான அநீதிகள் அகற்றப்பட்டு நியாயம் வழங்கப்பட வேண்டும்.

கே : (13) நாடற்றவர் பிரச்சினை, மனிதாபிமானப் பிரச்சினையாவ தெப்படி ?

ப : இது பாரதூரமான மனிதாபிமானப் பிரச்சினையேயாகும். இவர்களுக்கு இந்தியாவில் உற்ருர் உறவினர்கள் இல்லையா கையால் இவர்களின் பாட்டன், பூட்டன் 100 வருடங்களுக்கு முன் எந்தக் கிராமத்திலிருந்து வந்தார்களென்பது இவர் களுக்குத் தெரியாது. புதிய சூழ்நிலையில் அவர்களின் எதிர்காலம் பயங்கரமானதாகிவிடலாம். இவை எல்லா வற்றிற்கும் மேலாக அவர்கள் இந்தியாவுக்குப் போக விரும்பவில்லை. இந்தியப் பிரஜாவுரிமையை அவர்கள் கோர வுமில்லை. அவர்கள் கோரியது இலங்கைப் பிரஜாவுரிமையை யேயாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கே : (14) இவ்விதம் இவ்வாறு எஞ்சியிருப்பவர்களுக்கு இலங்கைப் பிரஜாவுரிமை வழங்கப்பட வேண்டுமென்பதில் சர்வ கட்சி மாநாட்டில் பொது இணக்கம் காணப்பட்டதா ?

ப : உண்மையில் காணப்பட்டது. இப்பிரச்சினைக்குத் தீர்வாக அவர்களுக்குப் பிரஜாவுரிமை வழங்குவது பற்றி எவருமே எதிர்ப்புத் தெரிவிக்கவில்லையென மேதகு ஜனதிபதி சர்வ கட்சி மாநாட்டில் அறிக்கையிட்டார்.

கே : (15) இது இலங்கைக்கு மாத்திரம் விசேடமான பிரச்சினையா ? அல்லது இந்தியப் பிரஜைகள் பெரும்பாலானோர் இருக்கின்ற நாடுகளிலும் உண்டா ?

ப : இது இலங்கைக்கு மாத்திரம் விசேடமான பிரச்சினையல்ல. உலகம் முழுவதும் ஒரு கோடி 10 லட்சம்/ஒரு கோடி 20 லட்சம் வரை இந்தியவம்சாவளி மக்கள் இருக்கின்றனர். அந்நாடுகளில் நாடற்றவர் பிரச்சினையை வெற்றிகரமாகத் தீர்த்து வைத்துள்ளார்கள்.

கே : (16) இந்தியா, சிறிமா—சாஸ்திரி ஒப்பந்தத்தை மீறியுள்ளதெனவும், 6,00,000 பேரைத் திரும்ப இந்தியாவுக்கு அழைத்துக் கொள்வதென்ற உடன்படிக்கையை மீறியுள்ளதெனவும் சிலர் கூறுகிறார்கள். இது உண்மையா ?


ப : ஒப்பந்தம் மீறப்படவில்லை. 94,000 பேர் இந்தியப் பிரஜாவுரிமை கோரி விண்ணப்பிக்காததால், இந்தியா ஒப்பந்தத்தின் ஒரு பகுதியான 6,00,000 பேருக்கு இந்தியப் பிரஜாவுரிமை வழங்கும் தனது பங்கினை நிறைவேற்ற முடியாதிருக்கிறது. இந்தியப் பிரஜாவுரிமை கோரியுள்ள 5,06,000 பேருக்கு இந்தியா பிரஜாவுரிமை வழங்குகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்க அச்சகத்தில் அச்சடிக்கப்பட்டது.
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org